**கவனிக்க.-** *10.02.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III), பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1746 - 2012 පෙබරවාරි මස 17 වැනි සිකුරාදා - 2012.02.17

*1746 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 194 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 194 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, பங்குனி மாதம் 16 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, தை 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | பண்டாரகம | ரைகம பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ரைகம் கோரளை பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், களுத்துறை |

2-467

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/ திறந்த போட்டிப் பரீட்சை - 2011 (2012)

இந்த அறிவித்தலில் "சேவையின்" எனும் பதம் இலங்கைத் திட்டமிடல் சேவையைக் குறிக்கும்.

1. **பரீட்சைத் திகதி**.- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2012, மே மாதத்தில் கொழும்பில் பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

2. **நியமிப்போரின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி**.- இது பற்றிய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலக்கம் 1670/32 மற்றும்

2010, செப்தெம்பர் மாதம் 10ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமானக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அதில் செய்யப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் செய்யக் கூடிய திருத்தங்களுக்கு இணங்கும் வகையில் தெரிவு செய்யப்படுகின்ற அபேட்சகர் ஒருவர் இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

**4. கட்டமைப்பும் மாதாந்த சம்பள அளவுத்திட்டமும்.**-2006.04.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 இன் எஸ்.எல் 1-2006 சம்பள முறைமையின் பிரகாரம்,

***மாதாந்தச் சம்பள அளவுத் திட்டம் :***

SL1 - 2006 - ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூ. 53,555.

5. **தகைமைகள்** :

5.1 ***திறந்த போட்டிப் பரீட்சை :***

(அ) கல்வித் தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட முதலாம் தர அல்லது இரண்டாம்தர சித்தியுடன் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் ஒன்று மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் நிறுவப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற பின்வருவோரில் ஒரு வருடத்திற்கு மேற்படாத பாடநெறி காலப் பகுதியினைக் கொண்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல்.

(ஆ) உடல்சார் தகைமைகள்.- சகல அபேட்சகர்களும் இலங்கையின் எந்தவொரு இடத்திலும் பணியாற்றுவதற்கு அனைத்து வழிகளிலும் உடல்சார் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) ஏனைய தகைமைகள் :

(i) இலங்கைப் பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும்

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்

(iii) திறந்த போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் எந்தவொரு நபருக்கும் தோற்றுவதற்கு அனுமதி கிடையாது.

(iv) யாதேனுமொரு சமயத் தலைவராக செயற்படும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற மாட்டார்.

(v) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் பூர்த்தி செய்துள்ளதாக கருதுவதற்கு விண்ணப்பதாரர், 5.1(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2012.02.17 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும், தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) வயது.- 2012.02.10 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று) 22 வயதிற்குக் குறையாதவராகவும், 28 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(உ) எழுத்து மூலப் பரீட்சை (அத்தியாயம் 1 ஐப் பார்க்கவும்)

| பாடங்கள் | உச்சப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தி அடைவதற்கான புள்ளிகளின் எண்ணிக்கை (ஆகக் குறைந்தது) |
|---|---|---|
| 1. கிரகித்தல் | 100 | 40 |
| 2. விவேகம் | 100 | 40 |
| 3. பொது அறிவும் ஆற்றலும் | 100 | 40 |

5.2 ***மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை :***

(அ) கல்வித் தகைமைகள்.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றிலே பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

(ஆ) அனுபவம்.- தமது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பம் கோரும் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் மேற்படி (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் MN1-2006(A) சம்பள அளவுத் திட்டத்தில் அல்லது அதிலும் கூடிய சம்பள அளவுத் திட்டத்திற்குரிய பதவி ஒன்றில் ஐந்து வருடத்திற்கு குறையாத, தொடர்ச்சியான, நிரந்தர மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(இ) உடல் தகைமைகள்.- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு தேவையான உடல் நிலையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) ஏனைய தகைமைகள் :

(i) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்

(ii) விண்ணப்பதாரர்களுக்கான தகைமை பெறுவதற்கு முந்திய ஐந்து வருட காலப்பகுதியினுள் உரிய தினத்தன்று அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) 2012.02.10 ஆம் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று) முந்திய ஐந்து வருட காலத்தினுள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைக் கொண்டிருத்தல்.

(iv) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இரண்டு தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(v) யாதேனுமொரு சமயத் தலைவராக செயற்படும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்.

(vi) சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவராகக் கவனத்திற் கொள்வதற்கு குறித்த விண்ணப்பதாரர், 5.2(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2012.02.17 ஆந் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்று) அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலும், தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) ஆட்சேர்ப்பு நடைமுறை.- எழுத்துமூலப் பரீட்சை (அத்தியாயம் 02 ஐப் பார்க்கவும்)

| பரீட்சித்துப் பார்த்துப் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| 4. கிரகித்தல் | 100 | 40 |
| 5. விடய அறிவு | 100 | 40 |
| 6. திட்டமிடல் | 100 | 40 |

6. **பரீட்சைக் கட்டணம்**.- திறந்த போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூ. 500 ஆகும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக் கட்டணம் ரூ. 500 ஆகும். விண்ணப்பதாரர் ஒருவர் இரண்டு பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் கட்டணமாக ரூ. 800 அறவிடப்படும். இக்கட்டணத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்திற்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்புச் செய்வதற்காக பிரதேசச் செயலகத்திற்கு செலுத்துதல் வேண்டும். பிரதேசச் செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய பெட்டியில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை விண்ணப்பதாரர்கள் தம்மிடம் வைத்துக்கொள்ளல் பொருத்தமான தாகும். இப்பரீட்சைக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பத்தை இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ-4 அளவிலான கடதாசி ஒன்றில் தயாரித்து விண்ணப்பதாரரினாலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப் படிவத்தின் இலக்கம் 01 முதல் இலக்கம் 04 வரையில் முதற் பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழியிலேயே நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் விண்ணப்பத்தினை தயாரிக்கும் போது அதன் தலைப்புக்களை ஆங்கில மொழியில் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) குறிப்பிடுதல் கட்டாயமானதாகும்.

(இ) திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபாலில் 2012.03.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளரிற்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "திறந்த போட்டிப் பரீட்சை, திட்டமிடல்" என்று தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு**.- அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும், திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தை திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(ஈ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களினூடாக பதிவுத் தபாலில் 2012.03.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளரிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, திட்டமிடல்" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எதுவித விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சை ஆகிய இரண்டிற்கும் தோற்றும் பட்சத்தில் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை, திட்டமிடல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

(உ) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பியவுடன் பத்திரிகைகளில் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் விளம்பரம் செய்யப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்களுக்குள் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். நீங்கள் தம்வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் மற்றும் பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று, பதிவு செய்த பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளியிலுள்ள பிரதேசம் ஒன்றிலாயின் பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கம் ஒன்றினையும்

குறிப்பிட்டு உங்களது வேண்டுகோள் கடித்தையும் தம்வசம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும்.

8. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, உரியவாறு விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து, உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பியுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒருவர் உரிய முறையில் கையொப்பத்தை உறுதி செய்து தமது அனுமதி அட்டை பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை முதலில் அந்த மண்டபத்தில் தோற்றும் நாளன்று அதற்குப் பொறுப்பான அதிகாரியிடம் வழங்குதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதிப் பத்திரம் ஒன்றினை அனுப்பியுள்ளமை, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை யுடையவர் என்று பொருள்கொள்ளக் கூடாது.

(ஈ) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் அணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுகின்றனர். அவ்வாறான சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு அவர் ஆளாக வேண்டி ஏற்படும்.

9. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பான தலைமை அதிகாரி திருப்தியடையும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் யாதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை ;

(ஆ) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் கடவுச்சீட்டு ;

விண்ணப்பதாரரின் அலுவலக அடையாள அட்டை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

10. **போலியான தகவல்களை வழங்குதல்**.- விண்ணப்பதாரர் ஒருவர் தகைமை பெறாதவர் என்று கண்டுபடிக்கப்படும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப் பகுதியில் அல்லது அதன் பின்னர் எந்தவொரு சர்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் வழங்கியுள்ள யாதேனுமொரு விடயம், அவர் போலியானதென தெரிந்து கொண்டே வழங்கியுள்ளமை கண்டுபிடிக்கப்படின், அல்லது யாதேனு மொரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

11. இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சை முறை**.- பரீட்சை மொழிமூலம்.- (அ) இப்பரீட்சை யானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தாம் விரும்பிய மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு**.- (i) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியில் மாத்திரம் தோற்றுதல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவருக்கு தமது விண்ணபத்தில் குறிப்பிடப்பட் டுள்ள மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

13. **பரீட்சித்தல் முறை** :

13.1 திறந்த போட்டிப் பரீட்சை.- பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்து மூலப் பரீட்சை ஒன்று:-

(1) கிரகித்தல் (காலம் : 02 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(2) விவேகம் (காலம் : 01 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(3) பொது அறிவும் ஆற்றலும் (காலம் : 03 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

பாடத்திட்டம் இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13.2 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை :

(4) கிரகித்தல் (காலம் : 02 மணித்தியாலம்) -100 புள்ளிகள்
(5) விடயம் சார்ந்த அறிவு (காலம் : 01 மணித்தியாலம்) -100 புள்ளிகள்
(6) திட்டமிடல் (காலம் : 02 மணித்தியாலம்) -100 புள்ளிகள்

13.3 நேர்முகப் பரீட்சை.- எழுத்து மூலப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக் குறைந்தது 40% வீதப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது தேவைக்கேற்ப எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

14.சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலம் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தலை ஒவ்வொரு மொழியிலும் வெளியிடும்போது யாதேனும் பொருத்தமின்மைகள் காணப்படின் சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட அறிவித்தலே வலுவுடையதாகக் காணப்படும்.

*15.* ***நியமனம் செய்வதற்கு தெரிவுசெய்யும் முறை.*** *- 2010.09.10 ஆம் திகதிய 1670/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு அமைவாக வெற்றிடங்கள் நிரப்பப்படும்.*

*திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் உச்ச புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள திறமையின் ஒழுங்குமுறைப்படி மற்றும் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒன்றுக்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் சம அளவான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் தெரிவு செய்வதற்கான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு வினாலேயே எடுக்கப்படும்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,*

*பீ. பி. ஜயசுந்தர,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01.*
*2012, பெப்புருவரி 10.*

*பின்னிணைப்பு 1*

**இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம் பற்றிய விபரம்**

*இப்பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-*

| தொடர் இல. | பாடங்கள் | உச்சப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடை வதற்கான புள்ளி களின் எண் ணிக்கை (ஆகக் குறைந்தது) | காலம் |
|---|---|---|---|---|
| 01 | கிரகித்தல் | 100 | 40 | 02 மணித்தியாலம் |
| 02 | விவேகம் | 100 | 40 | 01 மணித்தியாலம் |
| 03 | பொது அறிவு | 100 | 40 | 03 மணித்தியாலம் |

**பாடத்திட்டம் :**

*பாட இலக்கம் 01 - கிரகித்தல்.- இவ்வினாத்தாள் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது.*

*பகுதி I.- இதில் கட்டுரை ஒன்றும், சுருக்கம் எழுதுதல் ஒன்றும் அமைந்திருக்கும்.*

*பகுதி II.- விண்ணப்பதாரரின் மொழி பற்றிய அறிவினை பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்ட சில வினாக்கள் இதில் காணப்படும். இதில் கீழே கோடிடப்பட்ட கூற்றுக்களின் கருத்தை தனி வாக்கியத்தில் எழுதுமாறு அல்லது அது பற்றிய விளக்கம் எழுதுமாறு அல்லது மாற்றுத் தொகுதியில் இருந்து மிகவும் பொருத்தமான கூற்றை தெரிவு செய்யுமாறு அல்லது வழங்கப்பட்டுள்ள வினாக்களுக்கு பல்வேறு பதில்களில் சரியான பதிலை தெரிவு செய்யுமாறு அபேட்சகர்களிடம் வேண்டப்படும். அனைத்து வினாக்களுக்கும் பதிலளித்தல் வேண்டும்.*

*பாட இலக்கம் 02 – விவேகம்.- அபேட்சகரின் கணிதத் திறன், பகுப்பாய்வுத் திறன், தர்க்க ரீதியான திறன், தெளிவாற்றால் மற்றும் சரியாக தீர்மானிப்பதற்கான திறன் என்பவற்றினை அளவிடும் நோக்கில் இது தயாரிக்கப்படும். இது கோடிடல் மற்றும் சுருக்கப் பதில் அடிப்படையிலான 50 வினாக்களைக் கொண்டிருக்கும்.*

*பாட இலக்கம் 03 - பொது அறிவு.- இவ்வினாத்தாள் இலங்கையின் பூகோள, அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசாரச் சூழல் உள்ளிட்ட இலங்கையின் முழு சூழலையும் உள்ளடக்கியவாறும் மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவமிக்க நடைமுறை விடயங்கள், விஞ்ஞான ரீதியான, மொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்கள் என்பன தொடர்பாகவும் பரீட்சார்த்தியிடம் காணப்படும் அறிவினை பரீட்சித்தல். இவ்வினாத் தாளிலுள்ள சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.*

**குறிப்பு :**

(I) *விண்ணப்பதாரர்கள் இப்பரீட்சையில் சகல வினாத்தாள் களுக்கும் ஒரே மொழியிலேயே தோற்றுதல் வேண்டும்.*

(II) *அபேட்சகர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியினை மாற்றுவதற்கு இடமளிக் கப்பட மாட்டாது.*

(III) *அனைத்துப் பரீட்சார்த்திகளும் 03 வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.*

(IV) *ஒரு முறையில் ஆட்சேர்ப்புச் செய்வோரின் எண்ணிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் தீர்மானிக் கப்படும்.*

*பின்னிணைப்பு 2*

**இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்வதற்காக நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம் பற்றிய விபரம்**

*இப்பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-*

| தொடர் இல. | பாடங்கள் | உச்சப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடை வதற்கான புள்ளி களின் எண் ணிக்கை (ஆகக் குறைந்தது) | காலம் |
|---|---|---|---|---|
| 04 | கிரகித்தல் | 100 | 40 | 02 மணித்தியாலம் |
| 05 | விடய அறிவு | 100 | 40 | 01 மணித்தியாலம் |
| 06 | பொது திட்ட மிடல் | 100 | 40 | 02 மணித்தியாலம் |

**பாடத்திட்டம் :**

*பாட எண் 04 - கிரகித்தல்.- இதில் பரீட்சார்த்திகளுக்கு வழங்கும் பந்திகளிலிருந்து வினாக்கள் அமைந்திருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும்.*

*பாட எண் 05 – விடய அறிவு.-* விண்ணப்பதாரரின் சிந்தனைத்திறன் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறன் என்பவற்றினை பரீட்சிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட வினாத்தாள் ஆகும். இவ்வினாத்தாளில் தற்போதைய இலங்கையின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய நூல்கள் மற்றும் வெளியீடுகள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட வினா வொன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்றினை அபேட்சகர்களிடம் சமர்ப்பித்து அவற்றிற்கு தீர்வுகாணுமாறு கேட்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் பதிலளித்தல் வேண்டும்.

*பாட இலக்கம் 06 – திட்டமிடல்.-* இவ்வினாத்தாள் திட்டமிடல் கோட்பாடுகள் மற்றும் திட்டமிடல் உபாயங்கள் பற்றி பரீட்சாத்தியின் அடிப்படை அறிவினை பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வினாத்தாளிலுள்ள சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு** :

(I) பரீட்சாத்திகள் இப்பரீட்சையில் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே தோற்றுதல் வேண்டும்.

(II) அபேட்சகர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியினை மாற்றுவதற்கு இடமளிக் கப்பட மாட்டாது.

(III) அனைத்துப் பரீட்சாத்திகளும் 03 வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(IV) ஒரு முறையில் ஆட்சேர்ப்புச் செய்வோரின் எண்ணிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் தீர்மானிக் கப்படும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III இற்கான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை - 2011 (2012)**

| | |
|---|---|
| பரீட்சை இலக்கம் :<br>(அலுவலக பயன்பாட்டிற்காக) | |
| நீங்கள் விண்ணப்பிப்பது திறந்த போட்டிப் பரீட்சைக்கா / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கா அல்லது இரண்டிற்குமா என்பது பற்றி<br>மட்டுப்படுத்தப்பட்ட – 1, திறந்த – 2,<br>இரண்டும் - 3 (உரிய பெட்டியினுள் எழுதவும்)<br>* விண்ணப்பிக்கும் பரீட்சையினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | [ ] |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :<br>சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4<br>(உரிய பெட்டியினுள் எழுதவும்)<br>* விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. | [ ] |

1. பெயர்:

   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) MR/Mrs./Miss. :----.
   (உ+ம்) MR/Mrs./Miss. SILVA, A.B

   1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

   1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

   1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :
   [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

   2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

   2.2 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

   2.3 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

   2.4 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் அவரது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில், அதுபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்)

3.

   3.1 பால்: (பெண் - 1, ஆண் - 0) [ ]
   (உரிய இலக்கத்தை எழுதவும்)

   3.2 விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :
   விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2 [ ]
   (உரிய இலக்கத்தை எழுதவும்)

   3.3 பிறந்த நாள்:
   ஆண்டு: [ ][ ][ ][ ] மாதம்: [ ][ ] நாள்: [ ][ ]

   3.4 2012 .02.10 திகதியன்று வயது :
   வருடங்கள்: [ ][ ] மாதங்கள்: [ ][ ] நாட்கள்: [ ][ ]

4. செலுத்திய பரீட்சைக் கட்டணம் ரூபா :----.

5. (திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் களினால் நிரப்புவதற்காக) பின்வரும் விபரங்களை வழங்கவும் : ----.

   5.1 அறிவித்தலின் 5.1 பந்தியின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்று வதற்கு தகைமை பெறுவதற்காக பெற்றுள்ள தகைமைகள் : ----.

   5.2 அத்தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் : ----.

6. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்ப தாரர்களினால் நிரப்புவதற்காக) பின்வரும் விபரங்களை வழங்க வும்) :----.

   6.1 அறிவித்தலின் 5.2 பந்தியின் கீழ் இப்பரீட்சைக்குத் தோற்று வதற்கு தகைமை பெறுவதற்காக பெற்றுள்ள தகைமைகள் : ----.

6.2 அத்தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் :

(அ)

| பணியாற்றியுள்ள திணைக்களங்கள் | பதவி | முதல் | வரை | கால எல்லை |
|---|---|---|---|---|
| | | | | |

(ஆ)

(i) சேவை/பதவி --------------------------------

(ii) வகுப்பு --------------------- ஆம் திகதி முதல்

(iii) வகுப்பு --------------------- ஆம் திகதி முதல்

(iv) 2012.02.10 ஆம் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று) அரசாங்கத்தின் கீழ் மொத்த சேவைக் காலம்:

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

(அ) மேற்படி ii இல் சேவைக்காலம் :
வருடங்கள் :----. மாதங்கள் :----.

(ஆ) மேற்படி iii இல் சேவைக்காலம் :
வருடங்கள் :----. மாதங்கள் :----.

(v) 2012.02.10 ஆம் திகதியன்று (அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று) வருடாந்த சம்பளம் :

7.

7.1 இலங்கைத் திட்டமிடல் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு நீங்கள் தோற்றிய ஆண்டு :

1.................... 4....................
2.................... 5....................
3.................... 6....................

7.2 இலங்கைத் திட்டமிடல் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு நீங்கள் தோற்றிய ஆண்டு:

1....................
2....................
3....................

8. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு விண்ணப்பத்தில் ஒட்டவும் :

| பற்றுச்சீட்டை ஒட்டுவதற்காக |
|---|

(i) இலக்கம் :----.
(ii) திகதி :----
(iii) பணம் செலுத்திய இடம் :----.
(iv) செலுத்திய தொகை : ரூபா :----

9. விண்ணப்பதாரரின் சான்றிதழ்:

9.1 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையிலும் மற்றும் எனது நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய ......................... ஆம் இலக்க மற்றும் ...................... ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், பரீட்சை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும், இப்பரீட்சைக்குரிய நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவரென அடையாளம் காணப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது அது நடைபெறும் வேளையில் அல்லது அதன் பின்னர் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனும் தீர்மானத்திற்கு நான் உடன்படுவதாகவும், பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு நான் உடன்படுவதாகவும் உறுதிமொழிகிறேன்.

9.2 2012.02.10 ஆம் திகதியன்றுக்கு (அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் தினத்தன்று) முந்திய ஐந்து வருடக் காலப்பகுதியினுள் (சேவை அல்லது திணைக்கள நிபந்தனைகளில் ஒன்றான சம்பள ஏற்றம் தவிர்ந்த) சகல சம்பள ஏற்றங்களும் என்னால் உழைக்கப்பட்டுள்ளது எனவும், (எச்சரிக்கை விடல் தவிர்ந்த) எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கும் நான் ஆட்பட்டதில்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

..................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10.

10.1 **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்:** (மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரர்களும் மற்றும் தகைமை பெறும் பட்சத்தில் மாத்திரம் திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்க்கும் பூர்த்தி செய்தல் வேண்டும்.) தமது அந்தரங்க கோப்புக்களை பேணிவரும் அலுவலகத் தலைவரே திணைக்களத் தலைவராக கையொப்பமிடுதல் வேண்டும்.)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ....................... எனும் பெயருடைய விண்ணப்பதாரர் ............... ஆம் திகதி முதல் இந்த அலுவலகத்தில் பணியாற்றுவதாகவும், அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானவை எனவும் மேற்படி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள

அனைத்தும் இந்த அலுவலகத்திலுள்ள ஆவணங்களில் இருந்து நான் தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பெற்றுக் கொண்டவை எனவும், 2012 ............................ மாதம் ..................... ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கைச்சாத்திட்டதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(இறப்பர் முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்).
திகதி..............................

10.2 உறுதிப்படுத்துதல் (திறந்த போட்டிப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களினால் தேவையாயின் மாத்திரம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.)
இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ........................ எனும் பெயருடைய விண்ணப்பதாரரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் எனவும், அவர் என் முன்னிலையில் இங்கு கைச்சாத்திட்டதாகவும், உறுதிப்படுத்துகிறேன்.

................................
உறுதிப்படுத்துபவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**குறிப்பு**.-உறுதிப்படுத்துபவர் சமாதான நீதவான் ஒருவராக, சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவராக, சட்டத்தரணி ஒருவராக, நொத்தாரிசு ஒருவராக அல்லது வருடாந்தம் ரூ. 230,700 இற்குக் குறையாத திரண்ட சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

2-633

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.